OS.No.310/2013 – 11.10.2023

PW1 – ராமசாமி

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 13 முதல் 17, 19 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும் என்றால் தெரியும். தாவா சொத்து எந்த கிராமத்தில் எவ்வளவு நிலம் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் தீவட்டிப்பட்டி கிராமத்தில் உள்ளது. சர்வே எண் தெரியாது. மொத்தம் எத்தனை சர்வே எண்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 23 ஏக்கர் சில்லரை ஆகும். ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு விஸ்தீர்ணம் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை எந்த ஆவணத்தின் அடிப்படையில் பிராதில் காட்டி உள்ளேன் என்றால் 4 பேர்கள் கிரயம் வாங்கியதன் அடிப்படையில் காட்டி இருக்கிறேன். அந்த ஆவணம் தான் எனது தரப்பில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்திருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் 10.06.1960 ல் அர்த்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டர், அர்த்தனாரி மகன் முத்து என்ற பெரியகவுண்டர், வெற்றி வேலப்பகவுண்டர் மகன் நல்லா கவுண்டர், நல்லி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டர் இந்த 4 பேரும் வாங்கிய சொத்துதான் தாவா சொத்து என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரி. இந்த ஆவணத்தில் சர்வே எண். 109, 110, 111, 114, 116 எண்களில்

மட்டும்தான் கிரயம் ஆகி உள்ளது என்றால் சரிதான். ஆனால் சொத்து விவரத்தில் சர்வே எண்.115/6 ஏ, 115/6 பி இரண்டு சர்வே எண்களும் வாசாஆ.1 ல் இல்லாமல் நானாகவே மற்றவர்களின் நிலங்களை தவறுதலாக தாவா சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு நெம்பர் தெரியாது. சர்வே எண்.115/6 ஏ, 115/6 பி இரண்டு சர்வே எண்களையும் தாவா சொத்தாக சேர்ப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன். 1960 ல் வாசாஆ.1 கிரயம் பெற்ற எந்த நபரும் உயிருடன் இல்லை என்றால் சரி. அர்த்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் முத்து கவுண்டர், பழனியப்பன், மற்றும் பவளாயி அம்மாள், சின்னபிள்ளை, கந்தாயம்மாள் ஆகியோர் வாரிசுகள். அர்த்தனாரிகவுண்டர் மகன் முத்து என்ற பெரியாகவுண்டருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் செங்கோட்டுவேல், ராமசாமி ஆகிய 2 மகன்கள், பெண்கள் 3 பேராக இருக்கலாம். நல்லா கவுண்டருக்கு பழனியப்பன் என்ற மகனும் 3 பெண் வாரிசுகளும் இருக்கிறார்கள். அந்த 3 பெண் வாரிசுகளின் பெயர் தெரியாது. நல்லி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டர் எனது தகப்பனார் ஆவார். என் அப்பாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நானும், எனது சகோதரி சின்னம்மாள் என்பவரும் வாரிசுகள் ஆவோம். சின்னம்மாவிற்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் திருமணம்

ஆனபிறகு அவர் இறந்துவிட்டார். சின்னம்மாளின் கணவர் பெயர் கந்தசாமி. கந்தசாமி இன்னும் உயிருடன் உள்ளார் என்றால் சரி. ஆனால் மறுபடியும் திருமணம் செய்து கொண்டார். அந்த கந்தசாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. கந்தசாமியின் அப்பா பெயர் சின்னபையன் என்கிற பழனியப்ப கவுண்டர்.

அர்த்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டரின் வாரிசுகள் இறந்துபோன 1,2, பிரதிவாதிகள் மற்றும் 11 முதல் 25 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 படி அதில் கண்ட சொத்தை வாங்கிய நால்வருக்கும் சமபாகம் உண்டு என்றால் சரி. 20.5.1969 தேதியில் மொத்தம் 85 செண்ட் நிலத்தை அர்த்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டர் வகையராவிற்கு என்னுடைய அப்பா விற்பனை செய்துள்ளார் என்றால் சரி. எங்கள் தகப்பனார் விற்பனை செய்த மேற்டி 85 செண்ட் அர்த்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டரின் வகையராவிற்கு சேர வேண்டியது என்றால் சரி. மேற்படி பரப்பளவு உள்ள சொத்து எங்களது பாகத்திலிருந்து குறைந்துவிடும் என்றால் சரி. 5.9.1960 ல் அர்த்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டர் வகையராவிற்கு எனது தகப்பனார் செங்கோட கவுண்டர் மற்றும் நல்லாகவுண்டர் இருவரும் சேர்ந்து 4 ல் ஒரு பாகத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த பத்திரம் ஓமலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.2513/1960 ஆக பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. அந்த பத்திரத்தில் மொத்த சொத்துக்களில் 4 ல் ஒரு பாகத்தை அர்த்தனாரி மகன் செங்கோட கவுண்டருக்கு கிரயம் செய்து கொடுத்ததை நான் இந்த வழக்கில் காண்பிக்காமல் மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நாங்கள் அனைவரும் ஆளுக்கொரு பகுதியாக விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. கூட்டதாகதான் விவசாயம் செய்து வருகிறோம். 1974 லிலேயே எங்களுக்குள் யார் யாருக்கு என்ன பாகம் என்று வாய்மூலமாக பிரித்துக்கொண்டு தனித்தனியாக சொத்து அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எத்தனை நபர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் 4 பேர்களின் வாரிசுகளும் இன்றுவரை விவசாயம் செய்து வருகிறோம். 1984 ல் எனக்கு தனியாக பட்டா வந்தது என்றால் சரியல்ல. பட்டா கொடுத்ததே எனக்குத் தெரியாது. தனி பட்டா கொடுத்த விவரம் எனனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் பட்டா கொடுத்து 6 மாதம் கழித்துதான் எனக்கு தெரியவந்தது. பட்டா கொடுத்த தேதியிலிருந்து இன்றைய தேதி வரை அந்த பட்டா செல்லாது என்று நான் வருவாய் துறையில் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. அதனால் மேல்முறையீடு செய்யவில்லை. முத்து என்ற பெரியாகவுண்டருக்கு 2 ஆண்வாரிசுகள், 5 பெண் வாரிசுகள் என்றால் எனக்குத் தெரியாது. நான் அந்த 5 பெண் வாரிசுகளை தரப்பினர்களாக

சேர்க்கவில்லை என்றால் சரி. அந்த 5 பெண்களை ஏன் வாரிசாக சேர்க்கவில்லை என்றால் 5 பெண்கள் இருந்ததே எனக்குத் தெரியாது. முத்து என்ற பெரியாகவுண்டரின் ஆண் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்து விட்டு பெண் வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.